# ஞானப்பள்ளு:

## இலக்கியம் - இறையியல் - வரலாறு



மேரி வினிபிரிடா. எஸ்

# ஞானப்பள்ளு:
## இலக்கியம் - இறையியல் - வரலாறு

**மேரி வினிபிரிடா. எஸ்**

**ஆசிரியர்** வெளியீடு
**'பெத் செபரிம்'**
மாத்தளை, இலங்கை
2022

| | |
|---|---|
| நூல் | : ஞானப்பள்ளு: இலக்கியம் - இறையியல் - வரலாறு |
| நூலாசிரியர் | : மேரி வினிபிரிடா. எஸ் |
| முதற் பதிப்பு | : 2022 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| பக்கம் | : xvii + 178 |
| வெளியீடு | : ஆசிரியர் வெளியீடு<br>'பெத் செபரிம்', மாத்தளை, இலங்கை |
| அச்சுப்பதிப்பு | : மிக்கி பிறிண்டிங் ஸ்பெசலிஸ்ற்<br>தபாற்பெட்டி சந்தி, திருநெல்வேலி. |
| விலை | : ரூபா 500/= |
| ISBN | : 978-624-99244-0-6 |

| | |
|---|---|
| Title | : Gnanapallu: Literature - Theology - History |
| Author | : Mary Winifreeda. S |
| First Edition | : 2022 |
| Copyright | : Author |
| Pages | : xvii + 178 |
| Publisher | : Author Publication<br>'Beth Sefarim', Matale, Sri Lanka |
| Printed by | : Mickey Printing Specialists<br>Postbox Junction, Thirunelvely |
| Price | : Rs. 500/= |
| ISBN | : 978-624-99244-0-6 |

**அட்டைப்பட விளக்கம்:**

மருதநிலத்து பள்ளரின் வாழ்வைச் சித்திரிக்கும் காட்சி இதன் மையப்பகுதியில் இடம்பெறுகின்றது. இதிலுள்ள மஞ்சள் நிறமானது மருத நிலம் மற்றும் கத்தோலிக்கத் திருஅவை என்பவற்றைக் குறிக்கும் அடையாளமாகும். அட்டைப்படத்தின் இடது பக்கமுள்ள குறியீட்டு அடையாளம் கத்தோலிக்கத் திருவையின் தலைமைப்பீடமான உரோமையும் அதன் வலது பக்கமுள்ள பிரான்சிஸ்கன் சிலுவை என அறியப்படுகிற மறைபரப்புச் சிலுவை, புனித நகரான எருசலேமையும் குறிக்கின்றது.

# உள்ளடக்கம்


வாழ்த்துரை v

அணிந்துரை ix

முன்னுரை xiii

சுருக்கக் குறியீட்டு விளக்கம் xvii

1. பள்ளுப் பிரபந்தத்தின் தோற்றம் - வளர்ச்சி - பயன்பாடு 01

2. ஞானப்பள்ளுப் பிரபந்தத்தின் கட்டமைப்பு 29

3. ஞானப்பள்ளுப் பிரபந்தத்தில் இறையியல் கருத்துக்கள் 53

4. ஞானப்பள்ளில் கத்தோலிக்க மறை சார்ந்த வரலாற்றுக் குறிப்புக்கள் 94

5. ஒப்பியல் நோக்கில் ஞானப்பள்ளு 128

உசாத்துணை நூல்கள் 168

சொற்சுட்டி 176

# முன்னுரை

மிகத் தொன்மையான வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ் இலக்கியத்தில் சிற்றிலக்கிய வகைகளுக்கும் தனிச் சிறப்பு உண்டு. இச் சிற்றிலக்கிய வகைகளில் எளிமையும் இனிமையும் பொருந்திய இலக்கிய வடிவமாகப் 'பள்ளு' திகழ்கின்றது. இது வயல்களில் உழவுத் தொழில் புரியும் மக்களின் வாழ்க்கையைப் பாடுபொருளாகக் கொண்டமைந்துள்ளது. இவ்வாறு உழவுத் தொழிலில் ஈடுபட்ட பள்ளர், பள்ளியர்களின் வாழ்க்கையை ஒட்டிய கூத்து வகைகள், பாட்டும் தாளமும் இணைந்து அமையப்பெற்று, சாதாரண மக்களால் விரும்பிப் பாடப்பட்டு வந்துள்ளன. இதில் உள்ளடங்கும் ஆடல், பாடல் என்பவற்றில் மகிழ்ந்த புலவர்களின் சிந்தையில், 'அவற்றை இலக்கியமாகப் படைக்க வேண்டும்' என்று உதித்த உயரிய நோக்கும் ஆர்வமும் பள்ளுப் பிரபந்த இலக்கியங்களின் தோற்றத்துக்கு ஏதுவாய் அமைந்திருக்கலாம்.

உழவுத் தொழிலில் ஈடுபட்ட உழவர்கள், உழத்தியர்களின் வாழ்வில் நிகழப்பெற்ற சம்பவங்களை எளிமையாகவும் இனிமையாகவும் சுவைப்படவும்கூறுவதுபள்ளுப்பிரபந்தஇலக்கியத்தின்நோக்கமாகும். இரு மனைவியரையுடைய பள்ளன் நில உரிமையாளனான செல்வந்தனின் பண்ணையில் பரம்பரைப் பரம்பரையாக விவசாய வேலை செய்பவன். ஆயினும் இவன் மூத்தபள்ளியையும் விவசாய வேலைகளையும் கவனியாது, இளையபள்ளியிடம் மயங்கிக் கிடக்கின்றான். இதனை அறிந்த மூத்தபள்ளி பள்ளனைப் பற்றிப்

பண்ணைக்காரனிடம் முறையிடுகிறாள். எனவே இது குறித்து கோபம் கொண்ட பண்ணைக்காரன் பள்ளனைத் தண்டிக்கின்றான். ஆயினும் தண்டனைப்பெற்ற பள்ளன் வருந்துவதைக் காணும் மூத்தபள்ளி மனம் வருந்திப் பள்ளனை மீட்கின்றாள். தொடர்ந்து பள்ளன் வயல் வேலையில் ஈடுபடுகிறான். சில நாட்களின் பின்னர் பயிர் நன்கு விளைகின்றது. ஆயினும் நெல் அளந்து கொடுப்பதில் நீதி காணப்படவில்லை என மூத்தபள்ளி முறையிடுகின்றாள். இதனால் மூத்த, இளைய பள்ளியரிடையே வாய்த்தர்க்கம் ஏற்படுகின்றது. இறுதியில் சமாதானம் அடைந்த இருவரும் பள்ளனுடன் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். இதுவே பள்ளுப் பிரபந்தங்களில் காணப்படும் பொதுவான கதை மரபு.

ஈழத்தில் தோன்றிய பள்ளுப் பிரபந்தங்களில் சிதைவின்றி முழுமையாகக் கிடைக்கப்பெற்ற ஞானப்பள்ளின் கதையமைப்பு பொதுவானப் பள்ளுப் பிரபந்தக் கதையமைப்பிலிருந்து சற்று வித்தியாசப்படுவது கருத்திற் கொள்ளத்தக்கது. ஞானப்பள்ளானது இயேசுக் கிறிஸ்துவின் புகழைப் பாடுவதையே மையப் பொருளாகக் கொண்டுள்ளது. இது மறையைப் பரப்பும் நோக்குடன் மறைசார்ந்த இறையியல், வரலாற்றுக் குறிப்புக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றை எடுத்துரைக்கும் நோக்குடையதாக இந்நூலின் முயற்சி அமையப்பெற்றுள்ளது.

* * *

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2013 ஆம் ஆண்டு முதுத்தத்துவமாணி பட்டத்திற்கென சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையிலுள்ள சில விடயங்கள் தவிர்க்கப்பட்டு, சமகால பாவனையிலுள்ள சொற்பதங்கள் இணைக்கப்பட்டு, உசாத்துணை நூல்களை வழங்கும் முறையியலில் சில மாற்றங்களையும் மேற்கொண்டு நூல் வடிவு பெறுகின்றது. இந்நூல் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது. இதன் முதற்பகுதி 'பள்ளுப் பிரபந்தத்தின் தோற்றம் - வளர்ச்சி - பயன்பாடு' என்னும் தலைப்பில் பள்ளுப்

பிரபந்தங்களின் தோற்றப்பின்னணி சார்ந்த விளக்கங்களை எடுத்துரைப்பதாக அமையப்பெற்றுள்ளது. இதன் இரண்டாவது பகுதி 'ஞானப்பள்ளுப் பிரபந்தத்தின் கட்டமைப்பு' தொடர்பாக ஆய்வு செய்துள்ளது. இதில் வரும் மூன்றாவதும் நான்காவதுமான பகுதிகள் ஞானப்பள்ளின் உள்ளடக்கத்தை வெளிக்கொண்டுவரும் நோக்குடன் முறையே 'ஞானப்பள்ளுப் பிரபந்தத்தில் இறையியல் கருத்துக்கள், ஞானப்பள்ளில் கத்தோலிக்க மறை சார்ந்த வரலாற்றுக் குறிப்புக்கள்' என்னும் தலைப்புக்களில் அமையப்பெற்று, அவற்றுடன் தொடர்புடைய விளக்கங்களை முன்வைத்து, வாசகர்களுக்கு அதன் புரிதலை எடுத்துரைத்துள்ளன. மேலும் ஞானப்பள்ளின் தனித்துவத்தை எடுத்துரைக்கும் நோக்குடன் இதன் ஐந்தாவது பகுதியானது 'ஒப்பியல் நோக்கில் ஞானப்பள்ளு' என்னும் தலைப்பில் ஈழத்தில் தோற்றம் பெற்ற கதிரைமலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு ஆகியவற்றின் அமைப்பு, உள்ளடக்கம், இலக்கியச் சிறப்புக்கள் என்பவற்றை ஒப்புநோக்கு அடிப்படையில் எடுத்துரைப்பதாக அமையப்பெற்றுள்ளது.

* * *

தமிழ் இலக்கிய பரப்பில் காணப்பட்ட 'பள்ளு' என்னும் சிற்றிலக்கிய வடிவைக் கையாண்டு, இலங்கையில் போர்த்துக்கேயரின் ஆட்சி நிலவிய காலப்பகுதியில் எழுந்த தமிழ் கிறிஸ்தவப் பள்ளுப் பிரபந்த இலக்கியமான ஞானப்பள்ளின் சிறப்புக் கிறிஸ்தவ ஆய்வு கண்ணோட்டத்தில் திறம்பட எடுத்துரைக்கப்படுதல் வேண்டும் என்னும் உயரிய நோக்கில் இவ் ஆய்வுக்கான சிந்தனையையும் வழிகாட்டலையும் வழங்கிய எனது மதிப்பிற்குரிய ஆசான் வாழ்நாள் பேராசிரியர் ஓய்வு நிலை அருட்தந்தை ஞானமுத்து பிலேந்திரன் அடிகளார் வழங்கிய ஊக்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இவ் ஆய்வில் என்னை நெறிப்படுத்திய எனது ஆசான் ஓய்வு நிலை கலாநிதி எஸ். சிவலிங்கராஜா அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஞானப்பள்ளுப் பிரபந்தச் செய்யுள்களுக்கான பொருள் விளக்கங்களைப் பெறுவதில் எனக்கு உறுதுணையாக நின்ற ஆசிரியர் மு. சிங்கராயர் அவர்களுக்கும் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி செல்வ அம்பிகை நந்தகுமரன் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறிநிற்கின்றேன். மேலும் இந்நாலுக்கான அட்டைப்பட வடிவமைப்பிற்கு எனக்கு உதவி நல்கிய அருட்தந்தை மி. ஜெகன்குமார் கூஞ்ஞ அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலின் அச்சுப்பதிப்பிற்கு உதவிய மிக்கி பிறிண்டிங் ஸ்பெசலிஸ்ற் (Mickey Printing Specialist) பணியாளர்களுக்கும், இந்நூலை வெளியீடு செய்கின்ற நல்லாயன் நிலையத்தினருக்கும் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கத்தோலிக்க ஆன்மீக பணியகம்) எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

சாதாரண குடும்பத்தில் பிறந்த நான், முதுதத்துவமாணி கற்கையை மேற்கொண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றும் இந்நாள் வரையும் எனக்குப் பக்கபலமாக இருந்து உதவிய எனது பெற்றோருக்கு நன்றி தெரிவிக்கும் நோக்குடன் இந்நூலைச் சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**மேரி வினிபிரிடா. எஸ்**
விரிவுரையாளர்
கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைகள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.